ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 5.3 – வென்றிமா

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 5.3 – வென்றிமா

‡ வென்றி மா மழு ஏந்தி முன் மண் மிசை மன்னரை ⋆
மூ எழுகால் கொன்ற தேவ ⋆
நின் குரை கழல் தொழுவதோர் வகை ⋆
எனக்கருள் புரியே ⋆
மன்றில் மாம் பொழில் நுழை தந்து ⋆
மல்லிகை மௌவலின் போதலர்த்தி ⋆
தென்றல் மா மணம் கமழ் தர வரு ⋆
திருவெள்ளறை நின்றானே ‖ **5.3.1** ‖

வசை இல் நான்மறை கெடுத்த அம் மலர் அயற்கருளி ⋆
முன் பரி முகமாய் ⋆
இசை கொள் வேத நூல் என்றிவை பயந்தவனே ! ⋆
எனக்கருள் புரியே ⋆
உயர் கொள் மாதவிப் போதொடுலாவிய ⋆
மாருதம் வீதியின் வாய் ⋆
திசை எல்லாம் கமழும் பொழில் சூழ் ⋆
திருவெள்ளறை நின்றானே ‖ **5.3.2** ‖

வெய்யன் ஆய் உலகேழ் உடன் நலிந்தவன் ⋆
உடலகம் இரு பிளவா ⋆
கையில் நீள் உகிர்ப் படை அது வாய்த்தவனே ! ⋆
எனக்கருள் புரியே ⋆
மையின் ஆர் தரு வரால் இனம் பாய ⋆

வண் தடத்திடைக் கமலங்கள் ⋆
தெய்வ நாறும் ஒண் பொய்கைகள் சூழ் ⋆
திருவெள்ளறை நின்றானே ‖ **5.3.3** ‖

வாம் பரி உக மன்னர் தம் உயிர் செக ⋆
ஐவர்கட்கரசளித்த ⋆
காம்பின் ஆர் திரு வேங்கடப் பொருப்ப ! ⋆
நின் காதலை அருள் எனக்கு ⋆
மாம் பொழில் தளிர் கோதிய மடக் குயில் ⋆
வாய் அது துவர்ப்பெய்த ⋆
தீம் பலங்கனித் தேன் அது நுகர் ⋆
திருவெள்ளறை நின்றானே ‖ **5.3.4** ‖

மான வேல் ஒண் கண் மடவரல் ⋆
மண் மகள் அழுங்க முந்நீர்ப் பரப்பில் ⋆
ஏனம் ஆகி அன்றிரு நிலம் இடந்தவனே ! ⋆
எனக்கருள் புரியே ⋆
கான மா முல்லை கழைக் கரும்பேறி ⋆
வெண் முறுவல் செய்தலர்கின்ற ⋆
தேனின் வாய் மலர் முருகுகுக்கும் ⋆
திருவெள்ளறை நின்றானே ‖ **5.3.5** ‖

பொங்கு நீள் முடி அமரர்கள் தொழுதெழ ⋆
அமுதினைக் கொடுத்தளிப்பான் ⋆
அங்கோர் ஆமை அதாகிய ஆதி ! ⋆
நின் அடிமையை அருள் எனக்கு ⋆
தங்கு பேடையோடூடிய மதுகரம் ⋆
தையலார் குழல் அணைவான் ⋆

திங்கள் தோய் சென்னி மாடம் சென்றணை ⋆
திருவெள்ளறை நின்றானே ॥ **5.3.6** ॥

ஆறினோடொரு நான்குடை நெடு முடி ⋆
அரக்கன் தன் சிரம் எல்லாம் ⋆
வேறு வேறுக வில் அது வளைத்தவனே ! ⋆
எனக்கருள் புரியே ⋆
மாறில் சோதிய மரதகப் பாசடைத் ⋆
தாமரை மலர் வார்ந்த ⋆
தேறல் மாந்தி வண்டின் இசை முரல் ⋆
திருவெள்ளறை நின்றானே ॥ **5.3.7** ॥

முன் இவ்வேழ் உலகுணர்வின்றி இருள் மிக ⋆
உம்பர்கள் தொழுதேத்த ⋆
அன்னம் ஆகி அன்றரு மறை பயந்தவனே ! ⋆
எனக்கருள் புரியே ⋆
மன்னு கேதகை சூதகம் என்றிவை ⋆
வனத்திடைச் சுரும்பினங்கள் ⋆
தென்ன என்ன வண்டின் இசை முரல் ⋆
திருவெள்ளறை நின்றானே ॥ **5.3.8** ॥

ஆங்கு மாவலி வேள்வியில் இரந்து சென்று ⋆
அகல் இடம் முழுதினையும் ⋆
பாங்கினால் கொண்ட பரம ! நின் பணிந்தெழுவேன் ⋆
எனக்கருள் புரியே ⋆
ஓங்கு பிண்டியின் செம் மலர் ஏறி ⋆
வண்டுழி தர ⋆

மா ஏறித் தீம் குயில் மிழற்றும் படப்பைத் ⋆
திருவெள்ளறை நின்றானே ‖ **5.3.9** ‖

‡ மஞ்சுலா மணி மாடங்கள் சூழ் ⋆
திருவெள்ளறை அதன் மேய ⋆
அஞ்சனம் புரையும் திரு உருவனை ⋆
ஆதியை அமுதத்தை ⋆
நஞ்சுலாவிய வேல் வலவன் ⋆
கலிகன்றி சொல் ஐ இரண்டும் ⋆
எஞ்சல் இன்றி நின்றேத்த வல்லார் ⋆
இமையோர்க்கரசாவர்களே ‖ **5.3.10** ‖

அடிவரவு — வென்றி வசை வெய்ய வாம்பரி மானவேல் பொங்கு ஆறு முன் ஆங்கு மஞ்சு உந்திமேல்

வென்றிமா முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்